செ.வெ.எண்: 41 நாள்: 15.11.2017

**<u>பத்திரிக்கை செய்தி வெளியீடு</u>**

**விலையில்லா வெள்ளாடுகள் / செம்மறியாடுகள் ஜனவரி 2018 மற்றும் பிப்ரவரி 2018 மாதங்களில் செயல்படுத்திட மாவட்ட ஆட்சித் தலைவர் தலைமையில் 15.11.2017 இன்று நடைபெற்றது.**

திருநெல்வேலி மாவட்டத்தில் விலையில்லா வெள்ளாடுகள் / செம்மறியாடுகள் வழங்கும் திட்டம் ஜனவரி 2018 மற்றும் பிப்ரவரி 2018 மாதங்களில் செயல்படுத்திட மாவட்ட ஆட்சித் தலைவர் தலைமையில் 15.11.2017 அன்று கால்நடை பராமரிப்புத்துறை, மண்டல இணை இயக்குர், மாவட்ட ஊரகவளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் , மாவட்ட வருவாய் அலுவலர், உதவி இயக்குநர் (ஊராட்சி) மற்றும் கால்நடை பராமரிப்புத்துறை அலுவலர்கள் கிராம நிலைக்குழு உறுப்பினர்களான தனி அலுவலர் ( கிராம ஊராட்சி), ஊராட்சி அளவிலான ஒருங்கிணைப்பாளர், கிராம வறுமை ஒழிப்பு சங்க செயலாளர், கால்நடை உதவி மருத்துவர் மற்றும் துணை வட்டார வளர்ச்சி அலுவலர் ஆகியோருடன் கிராம நிலைக்குழு உறுப்பினர்கள் கூட்டம் நடைபெற்றது.

விலையில்லா வெள்ளாடுகள் / செம்மறியாடுகள் வழங்கும் திட்டத்தில் ஒரு பயனாளிக்கு 4 வெள்ளாடுகள் / செம்மறியாடுகள் வீதம் வறுமைகோட்டிற்கு கீழ் உள்ள பெண்களின் வாழ்வாதாரத்தை முன்னேற்றுவதற்காக ஜனவரி 2018–ம் மாதம் 11 ஊராட்சிகளில் 1117 பயனாளிகளுக்கும், பிப்ரவரி 2018–ம் மாதம் 15 ஊராட்சிகளில் 1032 பயனாளிகளுக்கும் ஆக மொத்தம் 26 ஊராட்சிகளில் 2149பயனாளிகளுக்கு வழங்குவதற்கு 18 முதல் 60 வவதுக்குட்பட்ட விதவை, கணவரால கைவிடப்பட்ட, மாற்றுத்திறனாளி பெண்களை தேர்வு செய்வது குறித்து பின்பற்ற வேண்டிய விதிமுறைகள் எடுத்துரைக்கப்பட்டது.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம் திருநெல்வேலி.**